**தலைப்பு 145 – மீள் குடியேற்ற அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

மீள் குடியேற்ற அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஒக்தோபர் 06 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்

பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

-------------------

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

------------------------------------

**மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

--------------------------------------------------------------

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 403.45 மில்லியனாக ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 398.41 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 5.04 மில்லியன் அதாவது 1.25 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருபவை | 174.11 | 172.30 | 1.81 | 1.04 |
| மூலதனம் | 229.34 | 226.11 | 3.23 | 1.41 |
| மொத்தம் | 403.45 | 398.41 | 5.04 | 1.25 |

## 2.2 முற்பணக் கணக்கு

------------------------------

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

------------------------------------------------------------------------------------------

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

------------------------------------------------------------------------------------------

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 14501 | 4.0 | 3.12 | 2.0 | 2.3 | 12.5 | 7.8 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

------------------------------------------

அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.195 மில்லியன் ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மீள் குடியேற்ற அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட

அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 145 – மீள் குடியேற்ற அமைச்சு

---

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

---

அமைச்சால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | கடமைத் தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) இன் பிரிவின் 26 ஆம் பிரிவு | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை |

**3.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

---

விடய இல. 14501 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 338,755 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகள் சுமார் 04 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.3 உள்ளகக் கணக்காய்வு**

---

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சிற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 403,458,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பதவியணியினர் 101 ஆகக் காணப்பட்டது. அமைச்சிற்குச் சொந்தமான சொத்துக்களின் பெறுமதி ரூபா 187,350,460 ஆகும். அவ்வாறே வடக்கு, கிழக்கு மாகாணங்களின் 08 மாவட்டங்களிலும் இடம்பயர்ந்த மக்களை மீள் குடியேற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்கு ரூபா 262,000,000 தொகையும், வெலிஓயாவில் 357 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 58,000,000 தொகையுமாக, நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ளுதல் மீளாய்வாண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயலாற்றல்**

---

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---

அமைச்சால் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) வெலிஓயா வீடமைப்பு நிர்மாணத்தின் இரண்டாம் கட்டம்**

----------------------------------------------------------------------------------------------------

பயங்கரவாதத் தாக்குதாரின் காரணமாக இடம்பெற்ற மக்களுக்காக வெலிஓயா ஒன்றிணைந்த வீடமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 357 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. 2014 மே மாதத்தின் போது குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 40,000,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வீடமைப்பு நிர்மாணங்களுக்காக ரூபா 38,157,804 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 40,000,0000 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து வீடமைப்பு நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முல்லைத்தீவு மாவட்ட செயலாளரினால் ரூபா 17,904,594 தொகையும், அமைச்சினால் ரூபா 19,657,803 தொகையுமாக ரூபா 37,562,397 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த வீடமைப்பு நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் அத்திகதி வரையில் முழுமையாக நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகளில் 2014 ஆம் ஆண்டு வரையில் குடியிருப்பதை உறுதிப்படுத்தாத 26 வீடுகள் காணப்பட்டதுடன் கணக்காய்வில் அந்த நிலைமை சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னர் அந்த வீடுகள் தொடர்பான நிலையை, அமைச்சின் பின்தொடர் நடவடிக்கைகளின் போது மேலும் 23 வீடுகள் பூரணப்படுத்தப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்கூறப்பட்ட 26 வீடுகளில் 16 வீடுகள் கைவிடப்பட்டிருந்தமை பின்தொடர் அறிக்கையின் மூலம் அவதானிக்கப்பட்டது. அந்த வீடுகள்

தொடர்பாக அமைச்சினால் எஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வழிமுறைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இந்த நிர்மாணத்திற்காக அமைச்சிற்கு பங்களிப்பை வழங்கியிருந்ததுடன் அதில் ஒவ்வொரு நலனாளிக்கும் வழங்கப்பட்டுள்ள பொருள் பட்டியல் மற்றும் வீடுகளுக்காக செலவிடப்பட்ட ஒட்டுமொத்த செலவினம் தொடர்பான விபரங்கள் அமைச்சால் அதிகாரசபையிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல்**

---

வடக்கு, கிழக்கில் 08 மாவட்டங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்காக குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதற்கு மீளாய்வாண்டிற்காக அமைச்சால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 143,963,092 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சின் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வடக்கு, கிழக்கில் 8 மாவட்டங்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவதற்காக ரூபா 143,963,092 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த 08 மாவட்டங்களுக்காக அமைச்சினால் ரூபா 149,998,542 தொகையான நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 6,035,450 தொகை அதிகமாக நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அதிகமாக நிதி விடுவித்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அவ்வாறே மீளாய்வாண்டின் போது அமைச்சின் கணக்குகளின் பிரகாரம் வடக்கு, கிழக்கில் 03 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக ரூபா 85,705,093 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான

செலவினத்துடன் தொடர்புடைய விபரமான அறிக்கை அமைச்சினால் மாவட்ட செயலகங்களிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) மேற்கூறப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சினால் விடுவிக்கப்பட்ட பணத்திலிருந்து ரூபா 1,366,866 கூட்டுத்தொகையான நிதி மீதியை உரிய தரப்பினரிடமிருந்து மீள அறவிடுவதற்கு அமைச்சு போதியளவான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) இந்த செயற்திட்டங்களின் வேலையை பூர்த்தி செய்தல் மற்றும் நலனாளிகளுக்குக் கையளித்தல் போன்ற செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்திற்கு முன்னர் மேற்கொள்ளவேண்டியிருந்த போதிலும், அந்தக் காலத்தில் எவ்வித செயற்திட்ட வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டு நலனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 09 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 02 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 85 | 61 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 26 | 01 |
| | **மொத்தம்** | **129** | **98** | **31** |

**(ஆ) ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் ஏனைய அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட மனிதவளங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| இரண்டாம் நிலை | 01 | அரசாங்க தகவல் திணைக்களம் | 2005.04.03 ஆந் திகதியிலிருந்து தொடர்ச்சியாக |
| மூன்றாம் நிலை | 01 | தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம் | 2014.05.02 ஆந் திகதியிலிருந்து தொடர்ச்சியாக |